
ஸ்ரீ

# நீதிச்செய்யுட்டிரட்டு.



1386

# முகவுரை.

அடையாறு, சென்னை

கல்வி அறிவை வளர்ப்பதும், மனத்தைச் செம்மை படுத்துவதும் என இருவகையினதாகும். அறிவை வளர்க்கும் கல்வியைக் கற்பார்க்கு அறிவு நன்கமையும். அதனால் அவர்கள் எத்தொழிலையும் திறமுறச் செய்யும் ஆற்றலுடையராவர். ஆயினும், அதனையுடையார் அதனை எவ்வழியிற் செலுத்துகின்றனரோ அவ்வழிக் கேற்ற பயனையே பயக்கும். அதாவது நல்வழியிற் செலுத்தின் நல்ல பயனையும், தீவழியிற் செலுத்தின் தீயபயனையும் பயக்குமென்பது. ஒருவர்தம் மறிவை நல்வழியிலேனும், தீவழியிலேனும் உபயோகித்தற்கு மனங் காரணமாகும். ஆகையால், தம்மனத்தைச் செம்மைப்படுத்தி வைத்திருப்போரே தம்மறிவை நல்வழியில் உபயோகித்தற்குரிய ஆற்றலுடையராவர். ஆகையால் ஒவ்வொருவருக்குந் தம் மனத்தைச் செம்மைப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டுவது இன்றியமையாத கடமையாம். மனத்தைச் செம்மைப் படுத்துதற்குரிய சாதனம் அறநூலும் வீட்டுநூலு மாகும்.

அவற்றுள்ளும் வீட்டுநூல் சுவப்பிரயோஜனத்தையே பெரிதுங்கருதி இவ்வுலக வின்பத்தை முற்றுந் துறந்து பரலோக வாழ்க்கையையே விரும்பினோர்க்கே வேண்டுவதாகலானும், அறநூல் இவ்வுலகின்கண் ஓருயிரோடு மற்றோருயிருக்குள்ள தொடர்பினைக் கருதி ஒருயிர்க்கும் இடரியற்றாமல் இன்புற்று வாழ்தற்குரிய நெறியைப் போதிப்ப

தாகலானும் அறநூலே இவ்வுலகவாழ்வை விரும்பினாரெல்லாராலுங் கற்றற்குரியதாம். அதனை நம்மிந்துக்கள் சிறப்பும் பொதுவுமாகிய இருவகையாகப் பகுத்தனர். அவற்றுள், சிறப்பாவது இன்னின்ன வருணத்தார்க்கு இன்னின்னது உரியதாமெனக் கூறுவது. பொதுவாவது யாவர்க்கும் ஒப்பமுடிந்தனவற்றைக் கூறுவது. தமிழிற் கூறிய நீதிநூற்களெல்லாம் இப்பொதுவகை யறத்தினையே கூறுகின்றன. தமிழிலுள்ள அறநூற்களில் தலைமையுற்று விளங்கும் திருக்குறளும் இவ்வகையி னமைந்ததேயாம். இதனைப் பரிமேலழகர் கூறிய உரைப்பாயிரத்துள் "அதுதான் நால்வகை நிலைமைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையிற் சிறுபான்மையவாகிய சிறப்பியல்புகளொழித் தெல்லார்க்கு மொத்தலிற் பெரும்பான்மையவாகிய பொதுவியல்புபற்றி இல்லறம், துறவறமென்னும் இருவகையாற் கூறப்பட்டது" என்று கூறியதனால் அறிதலாம். இத்தகைய அறத்தைக்கூறும் நூல்கள் தமிழில் தனித்தனியே பல விருப்பதோடு காவியங்கள், புராணங்கள் முதலிய நூல்களும் இடையிடையே சந்தர்ப்ப நேர்ந்தவிடத்துக் கூறுகின்றன. ஆனால் காவிய முதலியவை சிறப்பியல்புகளையுங் கூறும்.

இங்ஙனமாகிய இவ்விருகையில் பொது வகையினமைந்தவற்றைக் கூறுதலே இக்கால நாகரிகத்திற்கு ஏற்றதாகும். ஆகையால் அவ்வகையினமைந்த சில நீதிச்செய்யுட்களைத்திரட்டி "நீதிச்செய்யுட்டிரட்டு" என்னும் இந்நூலை யியற்றினேன். இந்நூலையான் இயற்றுதற்குக் காரணம் நமது தமிழ்மொழியில் பலநூற்களிலுமுள்ள நீதிச்செய்யுட்களைத்திரட்டி ஒரு சிறுநூலை யியற்றி மாணவர்களுக்

குப் பயன்படும்படி செய்தல்வேண்டும் எனச் சில பெரியோர்கள் பணித்தமையே யாகும். இந்நூலை வாசிக்கு மாணவர்கள் நீதிகளைத் தெரிந்துகொள்வதனோடு தெரிந்து கொண்ட நீதிகளைப்பற்றி வியாசமெழுதவும் அநுகூலமாகும்படி இந்நூலின் விஷயங்கள் 1. கடவுள், 2. பெற்றோரைப்பேணல், 3. ராஜபக்தி, 4. மாணவர்கடமை, 5. முயற்சி, 6. கல்வி, 7. வாய்மை, 8. அடக்கம், 9. நட்பு, 10. நன்றி, 11. கொல்லாமை, 12. பெரியோரியல்பு, 13. அன்பு, 14. அருள், 15. ஈகை, 16. கயமை, 17. சூது, 18. புறங்கூறாமை, 19. சிற்றினஞ்சேராமை, 20. பொருட்சிறப்பு என்னும் இருபது பகுப்புக்களாகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. இந்நூலின் முதற் பதிப்புச் செலவாய்விட்டது. அதிற் சில செய்யுட்கள் மாணவர்கள் அளவிற்குக் கஷ்டமானவைகளாக இருக்கின்றன எனச் சிலர் கூறினமையின் அவ்விதச் செய்யுட்களை நீக்கிச் சுலபமான வேறு சில செய்யுட்களையுஞ் சேர்த்து இவ்விரண்டாம் பதிப்பைப் பதிப்பித்தேன். உயர்தரப் பாடசாலைகளிலிருக்கும் ஒவ்வொரு தமிழ்ப் பண்டிதர்களும் இதனை மாணவர்களுக்குப் பயன்படும்படிசெய்து எனதிச் சிறுமுயற்சி நலமுறும்படி செய்யக் கோருகின்றேன். பச்சையப்பன் கலாசாலையில் என்னுடன் இருக்கும் பண்டிதர்களில் ஒருவ ராகிய ம-ா-ா-ஸ்ரீ சேஷாசலசாஸ்திரியார் தெலுங்கில் 'நீதிமார்க்கப்ரகாசிகா' என்னும் பெயரால் இங்ஙனமே ஒருநூலை இயற்றி யிருக்கின்றனர்.

இங்ஙனம்:

கா. ர. கோ.

(1913)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஸ்ரீ

# நீதிச்செய்யுட்டிரட்டு.

## 1. கடவுள்.

### திருவாய்மொழி.

உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற மதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமர்க ளதிபதி யெவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே. (1)

### தேவாரம்.

ஆதி யானை யமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை யுணர்தற் கரியதோர்
சோதி யானைக் கண்டீர் தொழற்பாலதே. (2)

### கம்பராமாயணம்.

உலகம் யாவையுந் தாமுள வாக்கலு
நிலைபெ றுத்தலு நீக்கலு நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவ ரன்னவர்க் கேசர ணாங்களே. (3)

### கந்தபுராணம்.

திருவந்ததொல்லைப் புவனத்தொடு தேவர் போற்றிப்
பெருவந்தனை செய்தறிதற் கரும்பெற்றி யெய்தி
அருவந்தனையு முருவத்தையு மன்றி நின்றான்
ஒருவன்றனது பதந்தன்னை யுளத்துள் வைப்பாம். (4)

## 2. பெற்றோரைப்பேணல்.

### திருக்குறள்.

மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல். (1)

### நான்மணிக்கடிகை.

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மைய வாய பொருளில்லை யீன்றாளின்
என்ன கடவுளு மில். (2)

### ஆசாரக்கோவை.

வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு
நல்லறமு மொண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற்
றந்தையுந் தாயுந் தொழுதெழுக வென்பதே
முந்தையோர் கண்ட முறை. (3)

### தனிப்பாடற்றிரட்டு.

ஈன்று வளர்த்த தாய்தந்தைக்
கெவரே கைம்மா றியற்றிடுவார்
ஆன்ற மதலை நாறுவய
தளவு மடிமைத் திறம்பூண்டு
மூன்று புவனத் துள்ளபொருண்
முற்று மளித்து முறைமுறையே
ஏன்று வழிபா டியற்றிடினு
மொருநாள் வளர்த்தற் கியையாதே. (4)

### நீதிநூல்.

சின்னவோர்பொருடந்தோரைச்சீவனுள்ளளவுமுள்ளத்
துன்னவேவேண்டுமென்னவுரைத்தனர்பெரியோர்தேகந்
தன்னையாருயிரைச்சீரார்தரணியின்வாழ்வைத்தந்த
அன்னைதந்தையர்க்குச்செய்யுமருங்கைம்மாறுளதோவம்மா.

எப்புவிகளும்புரக்குமீசனைத்துதிக்கவேண்டின்
அப்பனேயாயேயென்போமவரையேதுதிக்கவேண்டின்
ஒப்புமையுளதோவேலையுலகிற்கட்புலனிற்றோன்றுஞ்
செப்பருந்தெய்வமன்னார்சேவடிபோற்றாய்நெஞ்சே. (6)

கொன்றைவேந்தன்.

அன்னையும்பிதாவுமுன்னறிதெய்வம். (7)

## 3. ராஜபக்தி.

புறநானூறு.

நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம். (1)

நீதிநெறி விளக்கம்.

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயு - மறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ
மிலைமுகப் பைம்பூ ணிறை. (2)

நான்மணிக்கடிகை.

மழையின்றி மாநிலத்தார் கில்லை - மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை - தவமும்
அரசிலா ரில்வழி யில்லை - யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில். (3)

## 4. மாணவர் கடமை.

பாடங்கேட்டலின்முறை.

கோடன் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபட னுனியான்

குணத்தொடு பழகி யவன்குறிப் பிற்சார்ந்து
இருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவ னன்ன வார்வத்த னாகிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போத லென்மனார் புலவர். (1)

நூலைப்பயிலுமுறை.

நூல்பயி லியல்பே நுவலின்வழக் கறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை யமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்த லென்றிவை
கடனாக் கொளினே மடநனி யிகக்கும். (2)

ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பின்
பெருக நூலிற் பிழைபா டிலனே. (3)

முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும். (4)

ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னாகும். (5)

அவ்வினை யாளரொடு பயில்வகை யொருகாற்
செவ்வுதி னுரைப்ப வவ்விரு காலு
மையறு புலமை மாண்புடைத் தாகும். (6)

மாணவன் வழிபாடாற்று முறை.

அழலி னீங்கா னணுகா னஞ்சி
யிழலி னீங்கா னிறைந்த நெஞ்சமோ
டெத்திறத் தாசா னுவக்கு மத்திறம்
அறத்திற் றிரியாப் படர்ச்சி வழிபாடே. (7)

## 5. முயற்சி.

திருக்குறள்.

முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (1)

நீதிநெறி விளக்கம்.

உலையா முயற்சி களைகளை வூழின்
வலிசிந்து வன்மையு முண்டே - யுலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி. (2)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (3)

குசேலோபாக்கியானம்.

மானிட னொருவன் மனக்கருஞ் செல்வம் வாய்க்கவென்
றனுதின முயற்சி
தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத் தந்தளிக்
குவனதா லன்றோ

வானபே ரறிஞர் திருவினை முயற்சி யாக்குமம்
முயற்சியி லாமை
யினமா ரின்மை புகுத்திடு மாலென் றியாருநன்
குணர்தா நவில்வார். (4)

செயத்தகு முயற்சி செய்திடிற் செயிர்தீர் செய்யவண்
மணாளனு மிரங்கி
வியத்தகு வேண்டு மியாவையு மளிப்பன் விளம்புறு
முயற்சிசெய் யானை
னயத்தகு போக மளித்திடா னென்று நானிலத்
தறிஞர்நன் குரைப்ப
ருயத்தகு நெறிமா லடிபுணை யன்றே யோர்ந்தமா
தவப்பெருங் கடலே. (5)

## 6. கல்வி

### திருக்குறள்.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர். (1)

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்ச ளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு. (2)

இம்மை பயக்குமா லீயக் குறைவின்றாற்
றம்மை விளக்குமாற் றாமுளராக் கேடின்றா
லெம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து. (3)

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பி னரசர் செறின்வவ்வார்
எச்ச மெனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சை மற்றில்லை பிற. (4)

தோணி யியக்குவான் றொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார் - காணாய்
அவன்றுணையா யாறுபோ யற்றேநூல் கற்ற
மகன்றுணையா நல்ல கொளல். (5)

## 7. வாய்மை.

### திருக்குறள்.

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும். (1)

### சிறுபஞ்சமூலம்.

இம்மை நலனழிக்கு மெச்சங் குறைபடுக்கு
மம்மை யருநரகத் தாழ்விக்கு - மெய்ம்மை
யறந்தேயும் பின்னு மலர்மகளை நீக்கு
மறந்தேயும் பொய்யுரைக்கும் வாய். (2)

### நீதிவெண்பா.

நீசனே நீச னினையுங்காற் சொற்றவறு
நீசனே நீச னவனையே - நீசப்
புலையனு மென்றுரைக்கும் புல்லியனே மேலாம்
புலையனு மென்றே புகல். (3)

### சிலப்பதிகாரம்.

வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ வெய்தா வரும்பொருள். (4)

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

வில்லிபாரதம்.

அண்ணிய கிளையு மில்லு மரும்பெரு மகவு மன்புந்
திண்ணிய சீரு மிக்க செல்வமுந் திறலுந் தேசு
மெண்ணிய பொருள்கள் யாவு மியற்றிய தவமு மேனைப்
புண்ணிய மனைத்துஞ் சேரப் பொய்மையாற் பொன்று
மன்றே. (5)

## 8. அடக்கம்.

திருக்குறள்.

அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும். (1)

காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூஉங் கில்லை யுயிர்க்கு. (2)

நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது. (3)

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (4)

தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு. (5)

## 9. நட்பு.

திருக்குறள்.

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
இடுக்கண் களைவதா நட்பு. (1)

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும். (2)

நாலடியார்.

காதலார் சொல்லுங் கடுஞ்சொல் லுவந்துரைக்கு
மேதிலா ரின்சொலிற் றீதாமோ - போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
ஆவ தறிவார்ப் பெறின். (3)

இன்னா செயினு மினிய வொழிகென்று
தன்னையே தானோவி னல்லது - துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
விலங்கிற்கும் விள்ள லரிது. (4)

பெரியவர் கேண்மை பிறைபோல நாளு
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. (5)

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே - நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
வீரமி லாளர் தொடர்பு. (6)

யானை யனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கு நாய். (7)

நான்மணிக்கடிகை.

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின் - பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று. (8)

## 10 நன்றி.

திருக்குறள்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (1)

கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும். (2)

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (3)

நாலடியார்.

இனையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர் - பனையனைத்
தென்றுஞ் செயினு மிலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு. (4)

வில்லிபுத்தூரர் பாரதம்.

அரவ மல்கிய பதாகை யாய்மதி யமைச்சரா
யரச ழிப்பினுங்
குரவர் நல்லுரை மறுக்கி னும்பிறர் புரிந்தநன்
றியது கொல்லினு

மொருவர் வாழ்மனை யிலுண்டு பின்னுமவ ருடனழுன்
றுபொர வுன்னினு
மிரவி யுள்ளவு மதிய முள்ளவு மிவர்களே
நரகி லெய்துவார். (5)

## 11. கொல்லாமை.

### திருக்குறள்.

அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். (1)

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (2)

### பெருந்தேவனார் பாரதம்.

ஆனை யடியி லடங்கா வடியில்லை
தானதுபோ னிற்கின்ற தன்மைதா - னூனுயிரைக்
கொல்லா வறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு
மெல்லா வறமு மிசைந்து. (3)

### தாயுமானவர்.

கொல்லா விரதங் குவலய மெல்லா மோங்க
வெலார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே. (4)

### வளையாபதி.

உலகுடன்வி ளங்கவரு சீர்த்திநிலை கொள்ளின்
நிலையில்கதி நான்கினிடை நின்றுதடு மாறு
மலகிறுய ரஞ்சினுயி ரஞ்சவரும் வஞ்சக்
கொலையொழிமி னென்றுநனி கூறினர றிந்தார். (5)

## 12. பெரியோரியல்பு.

### திருக்குறள்.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (1)

### ஆசாரக்கோவை.

பிறர்மனை கட்களவு சூது கொலையோ
டறனறிந்தா ரிவ்வைந்து நோக்கார் - திறனிலரென்
றெள்ளப் படுவதூஉ மன்றி நிரயத்துச்
செல்வுழி யுய்த்திடுத லால. (2)

பொய்குறளை வெளவ லழுக்கா றிவைநான்கு
மையந்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பி
னையம் புகுவித் தருநிரயத் துய்த்திடுந்
தெய்வமுஞ் செற்று விடும். (3)

### பாத்துமோத்தர புராணம்.

கருமவன் பவத்தை மோகக்
களிப்பினைக் கணகிற் றீமை
தருமொரு சினத்தைப் பொல்லாச்
சர்ச்சையைச் சாய னீக்க
வருமழுக் காற்றை நீங்கா
மதத்தினை மம்ம ரோங்கிப்
பெருகுற வளிக்குந் தீய
பெட்பினைப பேணல் செய்யார். (4)

கொலையினை வலைஞர் செய்யுங் கோளினைக் கோதென் றோது
மலையினை மிடிமே லுய்க்கு மானத்தை மகியி னுளும் [ம்
அலையினை யுடைய தாகு மார்கலி யென்னுஞ் சன்ம
வலையினை வழங்குந் தீய வாக்கத்தை மதிக்க கில்லார். (5)

## 13. அன்பு.

### திருக்குறள்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு. (1)

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். (2)

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு. (3)

### பிரபுலிங்கலீலை.

துறவற மனைய றஞ்சீர் தூய்மைநற் கல்வி நல்லோர்
உறவொடு மகங்க டான மொண்டவம் விரதம் பூசை
அறிவிவை யனைத்து மிலலை யாதர மில்லை யாயிற்
பெறுவன மெய்வருத்தம் பெரும்பொரு ளழிவு மன்றே.

### தனிச்செய்யுள்.

கற்ற விலவியி ராகவன் கானகம்
உற்ற போதுயிர் நீங்கின னெண்பிதா
பற்று மன்புறு பாங்கரி னலலதை
மற்றும் வாழ்விந்த மாநிலத் துள்ளதோ. (5)

## 14. அருள்.

### திருக்குறள்.

நலலாற்றா னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை. (1)

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல். (2)

மகாமஹோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய
அடையாறு, சென்னை-20

**சீவக சிந்தாமணி.**

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோன்
மன்னுயிர் வைகலு மோம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனு மின்ப மூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துய்ந்து போகுமே. (3)

**பெருந்தேவனார் பாரதம்.**

இறப்ப நமக்கடுத்த வெவ்வநோ யாவும்
பிறர்க்குமஃ தாமென்று கொண்மி - னறக்கருதி
யெவ்வா றுமக்குறுதி யெண்ணுதிர்நீ ரெல்லார்க்கு
மவ்வாறே யெண்ண லறம். (4)

**சிறுபஞ்ச மூலம்.**

பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகு - மருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியு
முய்யான் பிறர்செவிக் குய்த்து. (5)

**தாயுமானவர்.**

எவ்வுயிரு மென்னுயிர் போலெண்ணி யிரங்கவுநின்
றெய்வவருட் கருணை செய்யாய் பராபரமே. (6)
தம்முயிர்போ லெவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே. (7)

## 15. ஈகை.

**திருக்குறள்.**

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று. (1)

அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (2)

சாதலி னின்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை. (3)

நாலடியார்.

உண்ணா னொளிநிறா னோங்குபுகழ் செய்யான்
றுன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும். (4)

உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார் - கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி. (5)

முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள - கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து. (6)

சிறுபஞ்ச மூலம்.

கழிந்தவை தானிரங்கான் கைவாரா நச்சான்
இகழ்ந்தவை யின்புறா னில்லார் - மொழிந்தவை
மென்மொழியா வுண்மகிழ்ந் தீவானேல் விண்ணோரால்
இன்மொழியா லேத்தப் படும். (7)

பழமொழி.

வழங்கலுந் துய்த்தலுந் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வந் - தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப வஃதன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம். (8)

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

## 16. கயமை.

### திருக்குறள்.

*காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்*
*கண்டானாந் தான்கண்ட வாறு.* (1)

*அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்*
*மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.* (2)

### நாலடியார்.

*இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்*
*மடங்காதா ரென்று மடங்காதார் - தடங்கண்ணாய்*
*உப்பொடு நெய்பா றயிர்காயம் பெய்தடினுங்*
*கைப்பறா பேய்ச்சுரையின் காய்.* (3)

*சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர்*
*எக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொ - லெக்காலு*
*முந்திரிமேற் காணி மிகுவதேற் கீழ்தன்னை*
*இந்திரனா வெண்ணி விடும்.* (4)

### சிறுபஞ்சமூலம்.

*மாசு படினு மணிதன்சீர் குன்றாதாம்*
*பூசிக் கொளினு மிரும்பின்கண் - மாசொட்டும்*
*பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை*
*மாசுடைமை காட்டி விடும்.* (5)

### பழமொழி.

*மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்*
*உப்பொழிதல் செல்லா வொலிகடல்போன் - மிக்க*
*இனநல நன்குடைய வாயினு மென்றும்*
*மனநல மாகாவாங் கீழ்.* (6)

அறநெறிச்சாரம்.

வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகு - மஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு. (7)

மூதுரை.

வேங்கை வரிப்புலிக்குத் தீர்த்த விடதாரி
யாங்கதனுக் காகார மானாற்போற் - பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்
கல்லின்மே லிட்ட கலம். (8)

நீதிவெண்பா.

ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்க்கும் விடங்கொடுக்கில் வாழுமே - நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழுதும் விடமே யாம். (9)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே - வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (10)

## 17. சூது.

திருக்குறள்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று. (1)

ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு. (2)

### திரிகடுகம்.

புலைமயக்கம் வேண்டிற் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கங் கள்ளுண்டு வாழ்தல் - சொலைமுனிந்து
பொய்ம்மயக்கஞ் சூதின் கட்டங்க லிவைமூன்று
நன்மை யிலாளர் தொழில். (3)

### அறநெறிச்சாரம்.

ஓதலு மோதி யுணர்தலுஞ் சான்றோரான்
மேதை யெனப்படு மேன்மையுஞ் - சூது
பொருமென்னுஞ் சொல்லினாற் புல்லப் படுமேல்
இருளா மொருங்கே யிவை. (4)

### நளவெண்பா.

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கு வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கு - மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. (5)

## 18. புறங்கூறாமை.

### திருக்குறள்.

அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது. (1)

### நாலடியார்.

கணமலை நன்றூட கண்ணின் றொருவர்
குணனேயுங் கூறற் கரிதாற் - குணனழுங்கக்
குற்ற முழைநின்று கூறுஞ் சிறியவர்கட்
கெற்றா லியன்றதோ நா. (2)

அறிநெறிச்சாரம்.

முன்னின் றொருவன் முகத்தினும் வாயினுங்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப் - பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை. (3)

பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கு - நல்லாய்
மணலின் முழுகி மறைந்து கிடக்கு
நுணலுந்தன் வாயாற் கெடும். (4)

வளையாபதி.

ஆக்கப் படுக்கு மருந்தளைவாய்ப் டெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகத் துய்ப்பிக்குங்
காக்கப் படுவன விந்திரிய மைந்தினும்
நாக்கல் லதில்லை நனிவெல்லு மாறே. (5)

## 19. சிற்றினஞ்சேராமை.

திருக்குறள்.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும். (1)

நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு. (2)

நாலடியார்.

ஆன்படு நெய்பெய் கலனு ளதுகளைந்து
வேம்படு நெய்பெய் தனைத்தரோ - தேம்படு
கல்வரை நாட நயமுணர்வார் நண்பொரீஇப்
புல்லறிவி னாரொடு நட்பு. (3)

உணர வுணரு முணர்வுடை யாரைப்
புணரப் புணருமா மின்பம் - புணரிற்
றெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமா நோய். (4)

மனத்தான் மறுவில ரேனுந் தாஞ்சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர் - புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
யெறிபுனந் தீப்பட்டக் கால். (5)

அறநெறிச்சாரம்.

குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா வுடையாரைத் - தெற்ற
அறிந்தாரென் றேத்து மவர்களைக் கண்டாற்
றுறந்தெழுவார் தூய்க்காட்சி யார். (6)

நீதிவெண்பா.

நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே - நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். (7)

ஆரியப்பப்புலவர் பாகவதம்.

சீலமுற் றுயர்ந்தவர்ச் சேரின் வீடுறும்
மாலையுற் றறிவிலார் மருங்க டைந்திடின்
வேலையுற் றலைதரும் பென்ன வெம்பவக்
கோலமுற் றிறந்திறந் துழலல் கூடுமால். (8)

## 20. பொருட்சிறப்பு.

### திருக்குறள்.

பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள். (1)

இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு. (2)

### நாலடியார்.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றி
னடுவண தெய்த விருதலையு மெய்து
நடுவண தெய்தாதா னெய்து முலைப்பெய்
தடுவது போலுந் துயர். (3)

ஆகா தெனினு மகத்துநெய் யுண்டாகிற்
போகா தெறும்பு புறஞ்சுற்றும் - யாதுங்
கொடாஅ ரெனினு முடையாரைப் பற்றி
விடாஅ ருலகத் தவர். (4)

### நான்மணிக்கடிகை.

கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத - மெல்லென்
அருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும். (5)

### நீதிநெறிவிளக்கம்.

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா - வென்சொலினுங்
கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம்
பித்துடைய வல்ல பிற. (6)

## நல்வழி.

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ - ரில்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். (7)

## கம்பராமாயணம்.

பூரியர் தமைவேந் தாக்கும் புவிபுரப் பிக்குந் துய்க்குஞ்
சீரிய வுண்டி சேர்க்குந் தேவர்தம் முலகம் போக்குங்
காரிய மனைத்துங் கூட்டுங் கருதலர் தம்மை வாட்டுங்
கூறிய திதன்மே லில்லை கொழும்பொனீர் கொண்மி னென்றான்.

## வளையாபதி.

குலந்த ருங்கல்வி கொணர்ந்து முடிக்கும்
அலந்த கிளைக ளழிபசி நீக்கு
நிலம்ப கவெம்பிய நீள்சுரம் போகிப்
புலம்பில் பொருடரப் புன்கண்மை யுண்டோ. (9)

## குசேலோபாக்கியானம்.

கோதறு கல்வி சாலூர் குடியிருந் தறியா னேனும்
ஓதரு செல்வ மிக்கோ னொருவனே சிறந்தோ னவன்
காதலின் வேத முன்னுங் கலைகள்கற் றுணர்ந்தா னேனுந்
தீதமை மிடிய னாயிற் சிறந்திடான் சிறிதுந் தானே. (10)

முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.